**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 9 ஆம் நாள் திங்கட்கிழமை**
**I.A. 5/2026 in O.S. No.189/2019**

1. ஜி.சுப்பையா(இறப்பு)
2. திருமதி.பி.வி.என்.சுபா(இறப்பு)
3. திலகவதி
4. நாகசுஜாதா
5. தாமோதரராஜ் ..... மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1. S.முத்தையா(இறப்பு)
2. பாப்பாத்தி
3. கோவிந்தராஜ் .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. P.V.நடராஜன்
5. விஜய சரவணா .....எதிர்மனுதார்கள்/மாறுதல் செய்யப்படவேண்டிய நபர்கள்

இம்மனுவானது 05.03.2026 அன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. ரவிச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும்:

**உத்தரவு**

மேற்படி வழக்கில் 6,7 வாதிகளை 4,5 எதிர்மனுதாரர்கள்/4,5 பிரதிவாதிகளாக TRANSPOSE செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுவுரை சுருக்கம்:–</u>**

மனுதாரர் இம்மனுவில் 3ம் மனுதார்/3ம் வாதி ஆவார். மற்ற பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து இம்மனுவை தாக்கல் செய்கிறார். மனுதாரரது கணவரான 1ம் வாதியும், 2ம் வாதியும் சேர்ந்து எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கேரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வரும் நிலையில், மனுதாரரது கணவரான 1ம் வாதி இறந்துவிட்டார்.

மனுதாரரது கணவருக்கு வாரிசு மனு தாக்கல் செய்து 3 முதல் 5 மனுதார்கள்/வாதிகள் ஆகிய மனுதாரர்கள் தரப்பினர்களாக உள்ளார்கள். அதே போல் வழக்கு நிலுவையில் இருந்து வரும் சமயம் 2ம் மனுதார்/2ம் பிரதிவாதியும் இறந்துவிட்டதால், அவரது வாரிசான அவரது கணவர் மற்றும் மகனை வாரீசாக சேர்க்க மனுத்தாக்கல் செய்து 6, 7 வாதிகள் தரப்பினராக உள்ளார்கள். இந்நிலையில் 6, 7 வாதிகள் மனுதாரர்கள்/வாதிகளுடன் சேர்ந்து வழக்கை நடத்த முன்வராத காரணத்தினால் இந்த 6, 7 வாதிகளை 4, 5 எதிர்மனுதார்கள்/4, 5 பிரதிவாதிகளாக தரப்பினராக Transpose செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

4) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5). **தீர்வு**

அசல் வழக்கானது மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மீது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில், 1 மற்றும் 2ம் மனுதாரர்கள்/வாதிகள் இறந்துவிட்டதால், அவர்களது வாரிசுகளான 6, 7 வாதிகள் தரப்பினர்களாக உள்ள நிலையில், 6, 7 வாதிகள், மனுதாரர்கள்/வாதிகளுடன் சேர்ந்து வழக்கை நடத்த முன்வராத காரணத்தினால், 6, 7 வாதிகளை இவ்வழக்கின் 4, 5 பிரதிவாதிகளாக TRANSPOSE செய்ய வேண்டும் என கூறியுள்ளது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வழக்கை இறுதியாக தீர்மானிக்க 6, 7 வாதிகளை 4, 5 பிரதிவாதிகளாக Transpose செய்து, இவ்வழக்கில் சேர்க்க வேண்டியது நீதியின் பொருட்டு மிகவும் அவசியமானதாகவும், இந்த மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த எதிருரையும் தாக்கல் செய்யப்படாத நிலையிலும், நீதியின் நலன் கருதி, 6, 7 வாதிகளை 4, 5 பிரதிவாதிகளாக Transpose செய்து இவ்வழக்கை மேல் நடத்த இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக**, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியா கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.03.09 17:48:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,ஆத்தூர்.